**செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 19.09.2022 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்றதின் நடவடிக்கைகள்**

**மன்றப் பொருள் 01 :**

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான 9 ஆண்டு குத்தகை இனம் 31–03–2022 உடன் குத்தகை காலம் முடிவடைந்த நிலையில் கீழ்காணும் குத்தகைதாரர்கள் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பித்து உத்தரவு வழங்ககோரி விண்ணப்பம் மனு செய்துள்ளதன் படியும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண் 92 நாள் 03–07–2007ன் படி முந்தைய மாத வாடகைத் தொகையில் 15சதவீதம் உயர்வு செய்து மேலும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு 31–03–2025 வரை மட்டும் அனுபவித்துக் கொள்ள உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்ப.டுகிறது.

| Sl.No | Shop Name | Shop No | | Asst Number | Old Rate | New Rate |
|---|---|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கடைகள் | D | SECRETARY SANKARANKOIL SARVOTHAYA SANGAM | 553 | 2145 | 2467 |
| 2 | | E | T.SUBBIAH PILLAI | 554 | 2555 | 2938 |
| 3 | | F | L.ARUMUGAM | 595 | 2796 | 3215 |
| 4 | | G | P.V.NATARAJAN | 556 | 2229 | 2563 |
| 5 | | H | VIVEKANANDAN | 557 | 1222 | 1405 |
| 6 | | J | S.SELVARAJ | 558 | 4529 | 5208 |
| 7 | | K | BALASUBRAMANIAN | 10115 | 992 | 1141 |
| 8 | | M | SECRETARY SANKARANKOIL SARVOTHAYA SANGAM | 561 | 1278 | 1470 |
| 9 | | N | THE BRANCH MANAGER , SETC | 562 | 906 | 1042 |
| 10 | | P | K.ESAKKI RAJAN | 12132 | 926 | 1065 |
| 11 | | Q | MATHIYALAGAN | 564 | 1278 | 1470 |
| 12 | | R | S.BALAKRISHNAN | 611 | 1141 | 1312 |
| 13 | | S | S.V.BALASUBRAMAINAN | 703 | 1310 | 1507 |
| 14 | | T | SARAVANA MUTHIAH | 567 | 1309 | 1505 |
| 15 | | U | P.CHELLADURAI | 568 | 1309 | 1505 |
| 16 | | V | P.CHELLADURAI | 569 | 1309 | 1505 |
| 17 | பேருந்து நிலைய சைவ உணவு விடுதி | 1 | PITCHURAJ | 121310 | 5357 | 6161 |
| 18 | பேருந்து நிலைய வெளிப்புற கடைகள் | 1 | MURUGAIAH | 549 | 2282 | 2624 |
| 19 | | 2 | S.P.SUBBIAH | 550 | 1438 | 1654 |
| 20 | | 3 | SYED SULAIMAN | 609 | 1316 | 1513 |
| 21 | பேருந்து நிலைய உள்புற VST கடை | 1 | N,KANIYATHA | 544 | 1073 | 1234 |
| 22 | பேருந்து நிலைய உள்புற VST கடை (Tea Stall) | 1 | P.UDHAYA SANKAR | 610 | 1749 | 2011 |
| 23 | SJSRY Building | 1 | THENTRAL WOMEN AND CHILD | 577 | 414 | 476 |
| 24 | | 2 | KASTHURIBAI WOMEN & CHILD HOME | 537 | 414 | 476 |

மேலும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாரச் சந்தை மற்றும் தினசரி சந்தை பழைய கட்டிடங்களை இடித்து புதிதாக கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதால், கீழ்காணும் 27 கடைகளுக்கு 01–04–2022 முதல் உரிமம் இரத்து செய்யப்பட்டுள்ளதால், கணிணியில் கீழ்காணும் 27 கடைகளின் வரிவிதிப்பு எண்களை இரத்து செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Demolished Building | | | | |
|---|---|---|---|---|
| **Sl.No** | **Shop Name** | **Shop No** | | **Asst Number** |
| 1 | வாரச் சந்தை முன்புற கடைகள் | 1 | P.V.NATARAJAN | 502 |
| 2 | | 2 | HARIHARA SUBRAMANIAN | 503 |
| 3 | | 3 | D.RAJ | 504 |
| 4 | | 4 | KUMARASAMY | 505 |
| 5 | | 5 | ARUMAINAYAGAM | 506 |
| 6 | | 6 | GNANADURAI | 507 |
| 7 | | 7 | P.V.NATARAJAN | 508 |
| 8 | | 8 | P.V.NATARAJAN | 509 |
| 9 | | 9 | P.V.NATARAJAN | 510 |
| 10 | | 10 | P.GANESAN | 511 |
| 11 | தினசரி சந்தை உள்புற கடைகள் | 5 | SYED SULAIMAN | 513 |
| 12 | | 6 | E.THAKSHANA MOORTHY | 514 |
| 13 | | 7 | E.BALASUBRAMANIAN | 515 |
| 14 | | 8 | P.CHELLADURAI | 516 |
| 15 | | 9 | P.CHELLADURAI | 517 |
| 16 | | 10 | P.CHELLADURAI | 518 |
| 17 | | 11 | ESAKKIMUTHU | 519 |
| 18 | | 12 | ESAKKIMUTHU | 520 |
| 19 | தினசரி சந்தை வெளிப்புற கடைகள் | 1 | AYYAPPAN | 521 |
| 20 | | 2 | MANIKANDAN | 522 |
| 21 | | 3 | P.CHELLADURAI | 523 |
| 22 | | 4 | S.P.AYYAPPAN | 524 |
| 23 | | 5 | P.NIRMAL KUMAR | 525 |
| 24 | | 6 | P.ALAGAIAH | 526 |
| 25 | | 9 | MOHAMED PANNAIR | 529 |
| 26 | | 10 | SUBBIAH PILLAI | 530 |
| 27 | | 11 | PONNUSEENI | 531 |

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கலைஞர் நகர்ப்புற மேல்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய கடைகள் கட்டப்படுவதால் வ.எண் 1 முதல் 27 வரை கடைகள் உரிமம் குத்தகை இனத்தில் இருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 131 ; மன்ற உறுப்பினர்களால் அலுவலக குறிப்பை கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப் பொருள் 02 :</u>**

செங்கோட்டை நகராட்சியில் Bio-Mining திட்டம் செயல்படுத்திட நகராட்சிக்கு சொந்தமான இலத்தூர் சுப்பிரமணியுரம் உரக்கிடங்கில் குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பை கழிவுகளை (Historical Waste) அகற்றுவதற்கு, குப்பைகளை அளவீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூ.177000/- The Director, Centre for Environmental Studies, Anna University, Chennai-க்கு செலுத்த தெரிவித்து Anna University, Chennai Letter No.1166/CES/Shenkottai/2022-23, நாள்:16.08.2022ன்படி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 132 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 03 :</u>**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட க.எண்:2/51 வரி விதிப்பு எண்:144/022/00223, திரு.செல்லப்பா என்பவர் பெயரில் உள்ளது. இக்கட்டிடம் குடியிருப்பு கட்டிடம் ஆகும். ஆனால் தவறுதலாக வணிக கட்டிடம் என பதியப்பட்டுள்ளது. தற்போது சொத்துவரி விதிப்பு குடியிருப்பு என திருத்தம செய்யப்பட்டுள்ளது. ஆனால் குடிநீர் இணைப்பு வணிக பயன்பாடு என இருப்பதால் வணிக கட்டிடத்திற்கான குடிநீர் கேட்பு வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி கட்டிடத்திற்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்பு எண்:144/022/00254ன் குடிநீர் கேட்பினை 2019-2020ம் ஆண்டிலிருந்து குடியிப்புக்கான கட்டணமாக மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 133 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 04 :</u>**

பணியாளர் வருங்கால வைப்புநிதி தொடர்பாக EPF APPELIATE TRIBUNAL, CHENNAI-ல் உதவி வருங்கால வைப்புநிதி ஆணையர் மற்றும் Recovery Officer திருநெல்வேலி ஆகியோருக்கு

எதிராக தொடரப்பட்டுள்ள மேல்முறையீட்டு வழக்கு EPF (A) No.42/2022–ற்கு 8.9.2022 அன்று EPF APPELIATE TRIBUNAL, CHENNAI–ல் Hearing நடைபெற உள்ளது எனவும் மேற்படி வழக்கிற்கு ஆஜராக வழக்கு கட்டணம் ரூ.10,000/– வழங்கவும், திரு.M.பாண்டியராஜன் வழக்கறிஞரால் கோரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு கட்டணம் ரூ.10,000/– திரு.M.பாண்டியராஜன் வழக்கறிஞருக்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 134 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 05 :</u>**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்:1 காலாங்கரை பகுதியில் குடிநீர் விநியோகம் சரியாக கிடைக்காத காரணத்தினால் மேற்படி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் 4" AC குழாய் பதிக்கப்பட்டுள்ள பகுதி தோண்டப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி குழாய் பதிக்கப்பட்டுள்ள பகுதி தேசிய நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையாகும். எனவே சாலை தோண்டப்பட்டமைக்கு பராமரிப்பு கட்டணம் ரூ.295481/– தேசிய நெடுஞ்சாலை துறைக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது. மேற்படி தொகையினை செலுத்தவும் அதற்கான தொகையினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 135 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 06 :</u>**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கசடு கழிவு சுத்தகரிப்பு நிலையத்திற்கு (FSTP) 2022–2023–ம் ஆண்டிற்கு Consent of Renewal Fees ரூ.43600/– தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்திற்கு செலுத்த கோரி கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 136 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 07 :</u>**

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார வாகனம் TN76P8356 பழுது பணிகள் மேற்கொண்டு உடன் தகுதிச் சான்று பெற இருப்பதால், மேற்காணும் வாகனத்தினை உடன் பழுது பணிகள் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி 13–09–2022ம் தேதி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்ட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | எஸ்.வி ஆட்டோ சர்வீஸ் சென்டர், தென்காசி ஏன்பவரது விலைப்புள்ளி விபரம் | ரூ.71,656/- |
| 2 | பொன் முருகன் ஆட்டோ மொபைல்ஸ், தென்காசி ஏன்பவரது விலைப்புள்ளி விபரம் | ரூ.75,153/– |

அலுவலகக் குறிப்பு ;

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திள்.எஸ்.வி ஆட்டோ சர்வஸ் சென்டர், தென்காசி என்பவருடைய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**<u>தீர்மானம் எண் 137 ; குறைந்த விலை விகிதம் அளித்துள்ள எஸ்.வி.ஆட்டோ சர்வீஸ் என்பவரது ஒப்பந்தம் அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 08 :</u>**

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார வாகனம் Battery Operated Vehicle வண்டிக்கு புதிதாக 5 சார்ஜர்கள் அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்ய தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி 13–09–2022ம் தேதி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்ட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | சார்ப் சிஸ்டம்ஸ், கோயம்புத்தூர் ஏன்பவரது ஒப்பந்தப்புள்ளி விபரம் | ரூ.7088/ ஒரு சார்ஜர்க்கு |
| 2 | செல்வராம் எண்டர்பிரைசஸ், திருப்பூர் ஏன்பவரது ஒப்பந்தப்புள்ளி விபரம் | ரூ.7350/ ஒரு சார்ஜர்க்கு |

அலுவலகக் குறிப்பு ;

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய சார்ப் சிஸ்டம்ஸ், கோயம்புத்தூர் என்பவருடைய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**<u>தீர்மானம் எண் 138 ; குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள சார்ப் சிஸ்டம்ஸ் என்பவரது ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 09 :</u>**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்:21, காமாட்சி தெரு, காமராஜர் காலனி தெரு, வார்டு 19 ராமசாமி தெரு, வார்டு 19 புலவர் தெரு மற்றும் வார்டு 2 சாஸ்திரி தெரு ஆகிய பகுதிகளில் சிறுமின் விசை பம்பு மோட்டார்கள் பழுதாகியுள்ளது. மேற்படி பகுதிகளில் பழுதான சிறுமின் விசை பம்பு மற்றும் மோட்டார்கள் சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.1,20,000/- ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 139 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 10 :</u>**

செங்கோட்டை நகராட்சி வல்லம் ரோடு பகுதியில் உள்ள MCC-களில் Bed Block மிகவும் பழுதடைந்து மோட்டார் இயங்கும்போது அதிர்வுகள் அதிகமாக உள்ளது. எனவே Bed Block பணி மேற்கொள்வதற்கு உத்தேச செலவு ரூ.21000/- ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 140 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 11 :</u>**

செங்கோட்டை நகராட்சி அம்மா உணவகத்தில் பயன்படுத்தப்படும் குடிநீர் வசதியின் 1 HP மோட்டார் பழுதடைந்துள்ளது. மேற்படி மோட்டார் சரி செய்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.4000/- ஆகும். இப்பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 141 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 12 :</u>**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்:1 காலாங்கரை பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்திற்கு பயன்படுத்தப்படும் தண்ணீர் சைவப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள கிணற்றிலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி கிணற்றின் 5HP மோட்டார் பழுதடைந்துள்ளது. பழுதடைந்த மோட்டாரை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.3790/- ஆகும். மேற்படி மோட்டார் பழுது நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 142 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 13 :</u>**

செங்கோட்டைநகராட்சி பேரூந்து நிலையத்திலுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளின் பைப்லைன் மிகவும் பழுதடைந்து நீர்க்கசிவு ஏற்பட்டு வருகிறது. மேற்படி பழுதடைந்த பைப்லைன் சரி செய்வதற்கு உத்தேச செலவு தொகை ரூ.2290/– ஆகும். மேற்படி பைப்லைன் சரி செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 143 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 14 :</u>**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் 7 சமுதாய கழிப்பிடங்கள் பட்டியலில் குறிப்பிட்டுள்ள விபரப்படி அமைந்துள்ளன.

| **வ.எண்** | **வார்டு எண்** | **கழிப்பிடம் அமைவிடம்** |
|---|---|---|
| 1) | 01 | மாணவர்கள் விடுதி அருகில் |
| 2) | 01 | வன அலுவலகம் அருகில் |
| 3) | 02 | முத்துசாமி பூங்கா |
| 4) | 07 | KC ரோடு பெண்கள் கழிப்பிடம் |
| 5) | 11 | வல்லம் ரோடு பெண்கள் கழிப்பிடம் |
| 6) | 16 | KC ரோடு கழிப்பிடம் |
| 7) | 22 | பம்பு ஹவுஸ் ரோடு கழிப்பறை |

மேற்காணும் 7 சமுதாய கழிப்பிடங்களிலும் சுத்தம், சுகாதாரம், பொது மக்கள் பயன்பாடு ஆகியவற்றினையும் நகராட்சி நிர்வாகத்தினை கருத்தில் கொண்டும் தற்போது ஏழு சமுதாய கழிப்பிடங்களையும் பராமரிக்க, நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட சுய உதவி குழுக்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 144 ; 7 சமுதாய கழிப்பிடங்களை சுய உதவிக்குழுக்கள் மூலம் திறம்பட நடத்துவது என்ற நிலையில் தற்சமயம் மிகவும் சீர்கேடாகவும், தூய்மை இல்லாமலும் இருப்பதாலும், வேறு குழுக்களுக்கு கொடுக்க வேண்டும் என மன்ற உறுப்பினர்கள் கூறினார்கள். அதற்கு திமுக கவுன்சிலர்கள் எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு நடத்தினர். பெரும்பான்மை நகர்மன்ற உறுப்பினர்கள் நல்ல முறையில் தூய்மையாகவும், நன்றாக நடத்தவும் வேண்டும் என ஆதரவு தர 7 சமுதாய கழிப்பிடங்களை நகராட்சி பரிவு செய்துள்ள நகர்மன்ற உறுப்பினர்கள் வேண்டுகோளுக்கு இணங்க வேறு நல்ல குழுக்களுக்கு மூலம் நடத்த வேண்டும் என முடிவு செய்து ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 15 :</u>**

நகர்மன்றத் தலைவர் அவர்களால் முன் மொழியும் தீர்மானம்

வார்டு எண் 2, குருசாமி தெருவில் வாறுகால் அமைத்து புதிய சாலை அமைக்க தீர்மானம் நிறைவேற்ற வேண்டி

.அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 145 ; நகர்மன்ற துணை தலைவர் அவர்கள் வழிமொழிய தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 16 :</u>**

13வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியும் தீர்மானம்.

செங்கோட்டை நகரம் மேலூரில் 5வது எண் ரேசன் கடை தனியார் கட்டிடத்தில் இதுவரை இயங்கி வந்தது. அந்த பகுதி மக்கள் கோரிக்கையினை ஏற்று வேறு இடத்தில் கட்டிடம் கட்டி ரேசன் கடை இயங்குவதற்கு கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து நிதி ஒதுக்கப்பட்டு கடை கட்ட இருப்பதாக தெரிய வருகிறது. மேற்படி குடிமை பொருள் அதிகாரிகளால் தேர்வு செய்யப்பட்ட இடமானது ஏற்கனவே பொருட்கள் பெற்று வந்த அப்பகுதி மக்களுக்கு வெகு தூரம் சென்று பொருள்கள் வாங்க வேண்டிய கஷ்டமான சூழல் உள்ளது, எனவே செங்கோட்டை மேலூர், மேலச் செங்கோட்டை அரசு பள்ளியின் அருகில் இருக்கும் அரசுக்கு சொந்தமான இடத்தில் மேற்படி ரேசன் கடையை கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி.

.அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 146 ; 14வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் வழி மொழிய தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.</u>**

நகர்மன்ற தலைவர்
செங்கோட்டை நகரமன்றம்

பெறுநர்,

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை

மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி